**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 438/2019 P.W. 3/L.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. நெல்சன் @ நெல்சன் ஆல்பிரட் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. பங்கிராஜ் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 27.01.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மஞ்சுளாவை எனக்குத் தெரியும். இவ்வழக்கில் இறந்து போன செல்வராஜ் என்பவர் எனது அம்மாவின் தம்பி ஆவார். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை எனது மாமா செல்வராஜ் வீட்டின் முன்பு இருசக்கர வாகனத்தில் வந்துக் கொண்டிருக்கும் பொழுது அவருக்கு பின்னால் வந்த மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்த நபர் எனது மாமாவின் இருசக்கர வாகனத்தில் மோதி எனது மாமா கீழே விழுந்து அடிபட்டுவிட்டார்.

2. இச்சம்பத்தை பார்த்த நான் எனது மாமாவை ஜேம்ஸ் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். என்னுடன் மஞ்சுளா என்பவரும் வந்தார். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக நாகர்கோவில் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு சிகிச்சை பலனின்றி எனது மாமா இறந்து விட்டார். எனது மாமாவை இடித்த இருசக்கர வாகனத்தின் எண் மற்றும் அந்த நபரை எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. எனது பெயர் என்னவென்றால், நெல்சன் ஆல்பிரட் ஆகும். எனது அப்பா பெயர் என்ன என்றால், பங்கிராஜ் ஆகும். எனது சகோதரர் பெயர் என்ன என்றால்,

நெல்சன் இல்பிரட் ஆகும். நான் நீதிமன்ற விசாரைணையில் கூறியதை தான் போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால், சரிதான். சம்பவ தினத்தன்று மஞ்சுளா சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால், சரிதான்.

2. சம்பவமானது ஒற்றைபனைவிளை என்ற ஊரில் செல்வராஜ் என்பவரின் வீட்டின் முன்பு தான் நடைபெற்றது என்றால், சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால், சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

3. சம்பவத்தின் பொழுது எனது தம்பி நெல்சன் இல்பிரட் சம்பவயிடத்தில் இல்லை என்றால், சரிதான். போலிசார் என்னை எங்கு வைத்து எப்பொழுது விசாரணை செய்தார்கள் என்றால், மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் பொழுது விசாரணை செய்தார்கள். செல்வராஜ் எத்தனை நாட்களுக்கு பிறகு இறந்தார் என்றால், சம்பவம் நடைபெற்ற 2–3 நாட்களில் இறந்தார்.

4. நான் சம்பவத்தை யார் பார்த்ததாக சொன்னேன் என்றால், நெல்ச்ன் ஆல்பிரட் என்ற நான் தான் பார்த்ததாக சொன்னேன்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.